பெய்யத் தவறியதின் காரணமாகத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டிருக்கிறேன். ஆகவே, அதற்கான விவரங்களைத் தனியாகத் தரமுடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : போஸ்ட்போன்மென்ட் பற்றிக் கேட்கப்பட்டது. இல்லை என்று சொன்னேன்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, கெடு தள்ளி வைக்கப்பட்ட கடன் தொகை 85 ஆயிரம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கும்பகோணம் மத்திய கூட்டுறவு பாங்கிலிருந்து இந்தத் தொகை வழங்கப்பட்டதா ? அல்லது வேறு வகையில் வழங்கப்பட்டதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : தஞ்சாவூரில் 85 ஆயிரம் ரூபாய், கும்பகோணம் பாங்கிலிருந்து 37 லட்சம் சில்லறை ரூபாய்.

அரசாங்க விளம்பரங்கள்

* 43 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட, கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கத்தின் விளம்பரங்கள் தினத்தாள்களில் வெளியிடப்படுவதில் கையாளப்படும் கொள்கை என்ன ?

(இ) எந்த அடிப்படையின்கீழ் பத்திரிகைகள் விளம்பரத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) அரசாங்க விளம்பரங்களைப் பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு முன் அப்பத்திரிகைகளின் விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கை, அவற்றில் பிரசுரமாகும் விஷயங்களின் தன்மை, தரம் முதலியன முக்கியமாகக் கவனிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட விளம்பரம் எந்தப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டால் நல்ல பலன் தரும் என்று ஆராய்ந்து அந்த பிரதேசத்தில் பிரசுரமாகும் பத்திரிகைகளுக்கு விளம்பரம் தரப்படுகிறது.

அவதூறான செய்திகளையும், உணர்ச்சியைத் தூண்டும் தகவல்களையும் வெளியிடும் செய்திப் பத்திரிகைகளுக்கு அவை நல்ல முறையில் விற்பனையானாலும்கூட அரசாங்க விளம்பரம் தரப்படுவதில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : பத்திரிகைகள் வருகின்ற தரத்தைப்பொறுத்து விளம்பரங்கள் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவ்விதம் தரத்தை நிர்ணயிப்பது யார் ?

கனம் திரு. கோ. பூவராகன் : தரத்தை நிர்ணயிப்பது அரசாங்கம்.

1st February 1966]

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார், அரசாங்க விளம்பரங்களைக் கொடுப்பதற்கு தமிழ் தினசரிகளில் எந்தெந்த பத்திரிகைகளை அரசாங்கம் தேர்ந்தெடுத்திருக்கிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : விளம்பரம் எந்த முறையில் கொடுக்கப்படுகிறது என்பதுதான் கேள்வி. அதற்கான விடை அளித்தேன். கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கு இப்போது தகவல் என்னிடமில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், எதிர்க்கட்சிப் பத்திரிகையான 'முரசொலி', 'நம் நாடு' போன்ற பத்திரிகைகளை அரசாங்கம் தரம் உள்ள பத்திரிகைகளாக நிர்ணயித்திருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : பத்திரிகையின் தரத்தைப் பொறுத்து விளம்பரம் கொடுக்கப்படும் என்று சொன்னேன். எந்தெந்த பத்திரிகைகள் தரமுள்ளவை என்று அரசாங்கம் கருதுகிறதோ அவைகளுக்கு விளம்பரம் கொடுக்கப்படும்.

Vellore Fort Moat

* 44 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state whether there is any proposal to desilt and deepen Vellore Fort Moat for setting up a boat club thereat?

கனம் திரு. கோ. பூவராகன் : மீன் வளர்க்கும் நோக்கத்தோடு வேலூர் கோட்டை அகழியில் தூறு வாரி ஆழப்படுத்தும் செயற் குறிப்பு ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது. இந்தத் திட்டம் படகுச் சங்கம் அமைக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

அறந்தாங்கி கூட்டு மன்றத்திற்கு கட்டடம்

* 45 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டில் அறந்தாங்கி கூட்டு மன்றத்திற்கு புதிதாகக் கட்டடம் கட்டுவதற்காக அனுமதி கோரி மாவட்ட வளர்ச்சி மன்றம் போட்ட தீர்மானம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்;

(இ) இந்த ஆண்டிலேயே அறந்தாங்கி பஞ்சாயத்து யூனியனுக்கு அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.